# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,, ரூ. 9-40
சோவேரய்ப்பகுதி: ,, ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
,, அரைக்கலம் ரூ. 5 00
,, காற்கலம் ரூ. 3 15
,, ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ருடு. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஸு தைமீ உடு (1924 பிப்ரவரி 7) வியாழக்கிழமை. { இலக்கம்—கூO.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

யாழ்ப்பாணம்
## சைவபரிபாலனசபையாராற்
பிரசுரஞ் செய்யப்பெற்ற
## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம் (சித்திரசகிதமானது) | கO |
| இரண்டாம் பாலபாடம் ,, | கடு |
| மூன்றாம் பாலபாடம் ,, | உO |
| நான்காம் பாலபாடம் ... ... | ருO |
| ஐந்தாம் பாலபாடம் ... ... ... | சO |
| ஆறும் பாலபாடம் ... ... ... | டுO |
| கலாமஞ்சரி விளக்கத்துடன் | எடு |
| கிருட்டிணன் றாது, உரையுடன் | அடு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ரு |
| ஆத்திசூடி ... ... | ரு |
| வெற்றிவேற்கையுரை ... ... | ரு |
| வாக்குண்டாமுரை ... ... ... | ரு |
| நல்வழியுரை ... ... ... ... | ரு |
| நன்னெறியுரை ... ... ... ... | ரு |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினாவிடை... ... ... | கO |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும்... | உடு |
| திருவாதவூரடிகள்புராண மூலம்... | உடு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை கிளேஸ்காகிதம் ... ... ... | க-உடு |
| றவ்காகிதம்... ... ... ... | க-OO |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | கO |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ரு |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ரு |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ரு |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | கO |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்த லேன்? ... ... ... ... ... | கO |
| சாவித்திரி சரித்திரம் (புதியபதிப்பு) | சு |
| குமணசரித்திரம் ,, | சு |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... ... | ரு |
| சோமவாரவிரதமான்மியம்... ... | கO |
| கந்தவிரதமான்மியம் ... ... ... | கO |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) | கடு |
| மறைசையந்தாதி ... ... ... | உ-O |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மனி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார் பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றூனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

---


[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனாமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றாவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் — சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றவூர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேக வெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனாம். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது சிட்டுக்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றாவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றாவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனாமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனாமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோர்ட்மூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றாவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனாம் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.



## நாணயமான சரக்குகள்! சகாய விலை.

காசி பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், உல்லன் போர்வைகள் முதலியன மிகவும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும்.

தமயந்தி மின்னல் கோடிச் சேலைகள். எல்லா லேட் கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலம் உடலில்பட்டுப்பூவேலைகளுடன் ஜரிகைக் கட்டங்கள் வேலை செய்தது. சேலை 1க்கு ரூ. 45 முதல் ரூ 100 வரை.

கத்தரிப்பூ சேலைகள்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலமுடையது. விளிம்பில் 1½, 2 இஞ்சு ஜரிகையினால் கொடி செடி வேலையுடன் முந்தியில் 5 அல்லது 6 இஞ்சு உயர்ந்த ஜரிகையினால் பூவேலைகள் செய்யப்பட்டது. சேலை 1-க்கு ரூ 80 முதல் ரூ 150 வரை.

"கேட்லாக்" இனாம். உடனே எழுதுங்கள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

**Silk Pitamber Coy.,**
Pitamber Buildings,
BENARES CITY.

(Y. 27)



காசிநாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.


---


அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற
மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை
ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில்
கொடுக்கும்!!

## ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
### புஷ்டிக்கு கைகண்ட மருந்து.
இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிசைஷ பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும், சொத்து ரோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.


---


பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
## அறைக்கீரைவிரைத்தைலம்.




இதன் குணம்:

பித்த மேகநீரானது சிரசிலேறி அதனால் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு நயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். சோமனாத்தய்யாள்,
மாவிபுபாக்கர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:—ருதிரோத்காரி௵ மாசி௴ 25௳ வியாழக்கிழமை.

## மகாத்மா காந்தி விடுதலை யடைந்தமை.

மகாத்மா காந்தி இந்த பிப்ரவரி மீ 4௳ திங்கட்கிழமை யிரவு சிறையினின்றும் விடுதலை யடைந்தனரென்னுஞ் சந்தோஷ சமாசாரம் யாழ்ப்பாணத்தி லுள்ளவர்கட்கு சென்ற 6௳ புதன்கிழமை 11 மணி வரையில் எட்டியது. இந்த மங்கல சமாசாரம் எட்டியபோது இங்குள்ளார் அடைந்த ஆனந்தத்திற்கு ஒரு எல்லையில்லை. பெரியர் சிறியர் ஆண்கள் பெண்கள் சைவர் கிறீஸ்தவர் இஸ்லாமானவர் புத்தர் என்னும் பேதங்களின்றி எல்லோரும் குதூகலத்துடன் காணப்பட்டனர். ஒரு மணி நேரத்துள் யாழ்ப்பாணத்தின் எப்பகுதிகளிலும் இந்தச் சந்தோஷசெய்தி பரவிவிட்டது. மகாத்மா விடுதலையடைந்தமையை வெளியிடும்படி உடனே இந்துசாதன விசேஷ பிரசுரமொன்று புறப்பட்டது. அபிமானமுள்ள வேறுஞ்சில அச்சியந்திரசாலை அதிபர்கள் இந்தச் சந்தோஷ சமாசாரத்தைத் துண்டுப் பத்திரங்களில் அச்சிட்டு மொட்டர் வண்டிகள் மார்க்கமாகவும் வேறுமார்க்கமாகவும் எங்கும் பரவச் செய்தனர். எவரும் மலர்ந்த முகத்துடன் காணப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் இவ்விஷயமாக இத்துணை மகிழ்ச்சி யேற்பட்டதென்றால், பாரத கண்டத்தில் காந்தியடிகள் விடுதலைகாரணமாக எழுந்த மகிழ்ச்சி எத்துணைத்தென்று சொல்லுதல் முடியுமா! சுருங்கச் சொல்லுமில் இந்தச் சந்தோஷ சமாசாரத்தைக் கேட்ட பாரதபுத்திரர்களனைவரும் ஆநந்தசாகரத்தில் மூழ்கினரென்றே சொல்லலாம்.

பம்பாய்த்தேசாதிபதியே மகாத்மாவை விடுதலைசெய்யும்படி ஆணை பிறப்பித்தார். மகாத்மா இப்பொழுதும் வைத்தியசாலையிலேயே யிருக்கின்றார். அவர் இப்பொழுது பூரணசவுக்கியம் அடைந்துவிட்டனரென்றும், வயிற்றிலிருந்த ரணம் முற்றிலுமாறிவிட்டதென்றும், படுக்கையை விடுத்து, கொஞ்ச நேரத்திற்கு தாம் இருக்கும் அறையில் அவர் குறுநடை கொள்ளுகின்றாரென்றும் தமது வைத்தியராகிய கேணல் மடக் அநுமதி செய்தாலன்றித் தாம் வைத்தியசாலையை விட்டுப்போவதில்லையென மகாத்மா தெரிவித்திருக்கின்றாரென்றும் சமாசாரம் பிறந்திருக்கின்றது.

மகாத்மாவின் விடுதலைக்குப் பலர் பல காரணங் கற்பிப்பர். பம்பாய் புதிய தேசாதிபதி மிகவும் நல்லவராதலின் மகாத்மாவை விடுதலை செய்தனரென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இங்கிலாந்திலே தொழிற்கட்சியாரின் பரிபாலனம் ஏற்பட்டுவிட்டமையினால் மகாத்மா விடுதலையடைந்தாரென வேறுசிலர் எண்ணுகின்றனர். சனத்தலைவர்கள் சட்டசபைகளில் வாதஞ்செய்து மகாத்மாவை விடுவித்தனரென இன்னுஞ் சிலர் சொல்வர். ஆனால் உண்மையை ஆராய்ந்து பார்க்கின் இவைகளெல்லாங்காரணமாகா. மகாத்மாவின் சிறைவாசம் பரமபிதாவாகிய கடவுளுக்கே இஷ்டமில்லாததாகும். அந்தப் பரமதயாநிதி பாரதமாதாவின் ஈடேற்றத்தைத் திருவுளத்துக்கொண்டு அவளது அரும் பெறற் புதல்வராகிய காந்தியடிகளை விடுவிக்கவேண்டி, பரசமயத்திலிருந்த திருநாவுக்கரசுநாயனார் வயிற்றிற் சூலைநோயை உண்டாக்கி அவரை அடிமைக்கொண்டபிரகாரம், மகாத்மாவின் உதரத்திலும் இரணத்தை வருவித்து அவர் சிறையை விடுவித்தனர். அந்த இறைவன் திருவருளின்படியே எதுவும் நிகழுமாதலின் மகாத்மா இனி என்ன செய்வாரென்பதைச் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய நாஞ் சொல்லல் முடியாது. ஆனால் ஒன்று மாத்திரம நாஞ் சொல்லதக்கது, சமாதானத்தின அவதாரத்தை, நற்குணக்குன்றை, மகாத்மாவை, இராசத் துரோகியென்றும் கலககாரனென்றும், விபரீதமாக இந்திய அரசினர் விளங்கிச் சிறைவைத்தார்களே. இவர்கள் அரசியல இருந்தபடியென்னை யென்று அமரிக்கர் முதலாக உலகத்திலுள்ள சகலசாதியாருங் கூறிய பழிமொழியிலிருந்து இந்திய அரசாங்கத்தார் தம்மை விடுதலைசெய்துகொண்டனரென்பதாம். மகாத்மாவைச் சிறையினின்றும் விடுவித்தருளிய கருணாநிதியாகிய இறைவனது திருவடிகளைத் திரிகரணங்களாலும் வழுத்துகின்றேம்.

## என்ன வேண்டும்? அபிமானம் வேண்டும்.

இவ்வுலகத்திலே பொன் வெள்ளி முத்து வைரம் இரத்தினம் முதலியவைகளினாலாய ஆபரணங்களிலும்பார்க்க மிகச் சிறந்த பூஷணம் அபிமானமேயாம். இவ்வபிமானம் சமயாபிமானம், சாதியபிமானம், பாஷாபிமானம், தேசாபிமானம் என நான்குவகைப்படும். இந்த நான்கனுட் சமயாபிமானமே அதிவிசேடமுடையது. சமயாபிமானம் இல்லாத ஒருவன் செய்யும் சமய கைங்கரியம் கூலிக்கு மாரடித்ததை ஒக்கும். எங்களுக்குரிய சில ஆலயங்களும், மடங்களும், வித்தியாசாலைகளும் சமயாபிமான மில்லாதவர்களுடைய கையிற் சிக்குண்டு நிலைதளர்ந்துகொண்டு வருகின்றன. இவைகள் இருக்குங் கிராமங்களிலே கட்சிபேதங்கள் காணப்படலாயின. இக்கட்சிபேதங் காரணமாக அவைகளின் முன்னேற்றம் அதிதூரம் தடைப்படலாயிற்று. இந்த விஷயத்திற் சம்பந்தமான வியாச்சியங்கள் நீதிஸ்தலத்தில் அதிகமாயின. இதனாலே ஐயாயிரம் பதினாயிரம் பதினையாயிரம் பெறுமதியான தருமக் கட்டடங்கள் உபயோகிப்பாரின்றி நாசமடைகின்றன. இதற்குக் காரணம் என்னவெனில் எங்களிடத்தில் சமயாபிமானமில்லாமையேயாம். சமய விஷயமான பிணக்கும், கலகமும், கட்சிபேதமும், வியாச்சியமும் ஏனைய சமயத்தவரிடத்திற் காண்பது அரிது. எங்களிடத்திலே அவைகள் அதிகப்படுகின்றன. பூர்வபுண்ணிய விசேடத்தினால் மானிடதேகம் எடுத்தவர்களும், அடுத்து வரும் பிறப்பில் ரௌரவாதி நரகங்களை என்றென்றைக்கும் ஆட்சியாக உடையவருமாகிய இத்தருமபரிபாலனர், வருங்காலத்தில்தமக்கு உரிமை யுடையதாகும் பெருங் கேட்டை ஒருசிறிதுஞ் சிந்தியாது தருமச்சொத்துகளைத் தம்முடையவாக்கியும், சிர்குலைத்தும் சாண்வயிறு வளர்க்கத் தலைப்படுகின்றனர்.

இத் தருமங்களை நடத்தும் அதிகாரிகள் சமயசாஸ்திர உணர்ச்சியில்லாதவர்களாயிருந்தலினால் தங்கள் தங்கள் மனம்போனவாறு செய்யத் தலைப்பட்டனர். அவ்வாறு நடத்துதலினால் எங்கள் சமயக் கொள்கைகள் அநேக நூதன முறைகளாகத் திரிக்கப்படலாயின. இதுவே எங்களுக்கும் எங்கள் சமயத்துக்கும் பேராபத்தை விளைப்பதற்கு அடிப்படையாயது. ஒருவருடைய சுயாதீனத்திலுள்ள எவ்வித தருமமாயினும் இக்காலத்திலும் இனிவருங் காலத்திலும் மேலானநிலையை அடையமாட்டாது. ஒருவாறு ஒருவருடையகாலத்திற் செவ்வனே நடைபெறுவது உண்மையேயாயினும் அது அவருடைய பிற்சந்ததியினரால் துர்வினியோகஞ்செய்யப்படும். இதனை அத்தாட்சிப் படுத்துவதற்கு எமது அநுபவத்தில் அநேக திருஷ்டாந்தங்களுண்டு.

ஆதலின் தருமச் சொத்துக்களைக் கொண்டு காலங்கழிக்கும் அதிகாரிகள் இனியாவது சமயாபிமானத்தையே சிறந்த பூஷணமாகத் தரிப்பதற்கு ஏற்ற வழிகளைத் தேடுதல்வேண்டும். இந்தப் பூஷணமானது அவர்களிடத்திலே சிறந்து பிரகாசிக்குமாயின் இதுகாறும் தத்தம் மனம்போனவண்ணம்கொண்டுநடத்திய விபரீதமான சமயக்கொள்கைகள் முழுவதும் அழிந்துவிடும். எங்கள் சமயசாஸ்திரக் கொள்கைகள் ஓங்கி வளரும்! அப்பொழுதே மானிடதேகம் எடுத்ததினால் உறும் பெரும் பயனைப் பெறும்பாக்கியம் முடையவர்களாவேம். பற்றியெரியும் அக்கினியிலும் பார்க்கச் சிவத்திரவியம் கவர்தலினாலாய பெருநெருப்பு மிகவுங் கொடியது. அக்கினியானது தன்னைச் சார்ந்தவர்களை மாத்திரஞ்சுடும். சிவத்திரவியம் நெருப்பிலுங் கொடியது.

“அந்தோபுரமெரித்த அண்ணலடியார்பொருள்கள், செந்தீயினுங்கொடிய தீகண்டாய்-செந்தீயை, நீங்கிற் சுடாதே நெடுந்தூரம் போனாலும், ஏங்கச் சுடுமே யிது.” என்பதனாலும் அறியக்கிடக்கிறது.

இவர்களுடைய அக்கிரமத்தைக் கண்ட சமயாபிமானிகளிடம் அதனை நீக்கவேண்டுமென்ற கிளர்ச்சி யில்லாமற்போகவில்லை. இவ்வித கிளர்ச்சிகள் ஒருகாலத்தில் வருதல் கூடும் என வுணர்ந்த நூதன விவேகிகளாகிய (சமயத்துரோகிகளுடைய) முன்னோர்கள், சமயாபிமானிகளுடைய கிளர்ச்சிகள் பயன் பெறுவண்ணமும், தங்கள் பிற்சந்ததியார் தப்பித்தவறி மீளாநரகத்திலிருந்து கரையேறுவண்ணமும் ஏற்ற சலாக்கியங்களை வகுத்துச் சென்றனர். இந்த ஒருகாரணத்தினாற்றான் நாம் மேலே கூறிய படி சில ஆலயங்களும் மடங்களும் வித்தியாசாலைகளும் ஏனைய தருமங்களும் இப்பொழுது நிலைகுலையலாயின. அந்நிய சமயத்தவர்கள் தங்கள்சமயத்தைப்பரப்புவதற்கு எவ்வளவு சிரமப்படுகிறார்களென்பதையாவது உற்றுணர்ந்து நமது அவ்வித அபிமானமாவது காட்ட வேண்டாமா? உடைநடைபாவனைகளில் மாத்திரம் அந்நியரைப் பின்பற்றி அவர்க்கும் முன்செல்லும் நம்மவர்கள் சமய விஷயத்தில் அவ்விதஞ் செய்யாது விடுதல் முறையல்லவே. தத்தம் மதங்களில் அபிமானம் பூண்டோர், மதவிஷயமாகப் பணஞ் சேகரிக்கப்புகின் பெருந்தொகை சேரமாட்டாதென நினைந்து, எல்லாச் சமயத்தவர்க்கும் பொதுவான தருமமெனப் பணஞ் சேகரித்து பின் அதனைப் பொதுவாகச் செய்யாது தமது சமய அபிவிருத்திக்குரிய முறையிற் பிரவேசித்தலைக் கண்ணாரக் காணக்கூடிய இக்காலத்தில் நம்மவர்கள் கொண்டுள்ள சமயாபிமானம் மிகவும் கவலைப்படக்கூடிய நிலையிலிருக்கிறது.

## உலகம் பலவிதம்.

கடலிலுள்ள மீன்களைப் பிடித்து பறியிலிட்டு பறிகளை முன்னும் பின்னுமாக ஒரு காவுதடியில் மாட்டித் தோளிற் சுமந்துகொண்டு வலைஞர் சிலர் வடதிசை நோக்கி வரும்பொழுது, பறியொன்றில் இறவாதிருந்த மீன் தனது தலையைநீட்டி மேலேபார்த்தது. அப்பொழுது பறியின் உட்பக்க விளிம்பிலே ஒரு பொட்டுப்பூச்சி இருப்பதைக் கண்டு “சிநேகிதா, இந்த இடம் எவ்விடம்? நீயும் எனக்கு ஒரு புதியசிநேகிதனாகக் காணப்படுகிறாய். என்னையும் யாரோ சுமந்து செல்வதுபோலத் தெரிகிறது. என்னை எங்கே கொண்டு போகிறார்கள்? எதற்காகக் கொண்டு போகிறார்கள்” எனக்கேட்டது. இதுகேட்ட பொட்டுப்பூச்சி “சிநேகிதா, நீயும் ஓர் அற்பசெந்து; நானும் ஓர் அற்பபிராணி; ஆனாலும் உன்னிலும் பார்க்க எனக்கு இந்த ஊரின் நடப்பு கொஞ்சங்கொஞ்சந் தெரியுமாதலினாற் சொல்லுகிறேன் கேள்: நான் இந்தப்பறியிலே கூடுகட்டி இரண்டு வருஷ காலமாக இருக்கிறேன். உன்னைப் போன்ற ஆயிரக்கணக்கான மீன்கள் தினந்தோறும் பிடிக்கப்பட்டு இறந்து போவதை நான் ஒவ்வொருநாளுங் கண்டு வருகிறேன்” என்றது.

* *

இதுகேட்ட மீன் மிகவும் ஆச்சரியமடைந்து “சிநேகிதா! உடம்பு உயிர் என்ற இந்த இரண்டிலும் உயிரே மிகச் சிறந்தது. இந்தஉயிர் நீங்கிவிட்டால் உடம்பை எவர்களும் அருவருத்துத் தூரத்தில் எறிந்துவிடுதல் அல்லது புதைத்துவிடுதலே உலக இயல்பு. அப்படியிருக்க நாங்கள் இறந்தபின் எங்களுடைய பிரேதங்களை எதற்காகச் சுமந்து செல்லுகிறார்கள்?” என்றது. அப்பொழுது பொட்டுப்பூச்சி மீனை நோக்கி “நண்பனே இந்த ஊரிலே மனிதர் என்று ஒரு படைப்பினர் இருக்கிறார்கள். அவர்கள் தாங்கள் எல்லாப் பிராணிகளிலும் உயர்ந்தவர்கள் என்ற எண்ணமுடையவர்கள். அவர்கள் உங்கள் துர்நாற்றமுடைய பிரேதங்களை அதிக விருப்பத்துடன் உண்பவர்கள். அவர்களே உங்கள்பிரேதங்களைச் சுமந்து செல்லும் வலைஞரிடம் வெள்ளிப் பணத்தை அள்ளிக் கொடுத்து வாங்குபவர்கள்” என்றபொழுது மீனானது சொல்லுகிறது: “அறிவுள்ளவர்களாகியமனிதரா எங்கள் பிரேதங்களை விலைகொடுத்து வாங்குபவரென்றும், அவற்றை விரும்பி உண்பவர்களென்றும் சொல்லுகிறாய்? நாங்கள் நீர்வாசிகளாதலினால் எங்களுக்கு உலகநடப்புத் தெரியாதென நினைத்துக் கேலி செய்கிறாயா?” எனக் கேட்டது.

* *

“இல்லை சிநேகிதா, நான் உண்மையையே சொல்லுகிறேன். உனக்கு இப்போதையும் மெய்யுமாகக் காட்டுகிறேன். இந்தா இது ஓர் சைவப் பிரபுவின் வீட்டு வாசல். அப்பிரபுவின் மனைவியார் உங்கள் வரவு காரணமாக அதிகாலையில் எழுந்து வீடுவாசலைப் பெருக்கிச் சாணி தெளித்து அவசியகருமம்முடித்து முகங்கழுவி நெற்றி நிறைய விபூதிதரித்து உங்களைக் காத்து வாசலில்நிற்கிறதைப் பார்; இந்தத்தெருவில் இருபக்கங்களிலுமுள்ள வாசல்களில் அநேக பெண்மணிகள் உங்கள் பிரேதவரவு கண்டு அலர்ந்த செந்தாமரைமலர்போன்ற முகமுடையவராய் விளங்குகிறார்கள். உங்களை வரவேற்குமாறு இரு கைகளிலும் ஏந்தப் பட்டிருக்கும் பெட்டிகளைப் பார்! அவைகள் உங்கள் பிரேதங்களை வாழ்த்துவண்ணம் எடுக்கப்பட்ட ஆலாத்தித் தட்டம்போலிருக்கின்றன. எங்களைத் தேடுவாருமில்லை, எங்களை வீட்டிற்கண்டாலும் அடித்துத் துரத்திவிடுவார்கள். உங்கள் பிரேதங்கள் பூர்வத்திற் செய்த புண்ணியத்தை அந்த மனிதர்தாமும் செய்துகொள்ளவில்லை. இப்பெண்மணிகள் உங்கள் பிரேதங்களுக்கு மஞ்சனமாட்டுகிறார்கள். உங்களுக்காக அக்கினி காரியஞ் செய்கிறார்கள். இதன்பொருட்டு இப்பெண்மணிகளுடைய நாயகர்கள் ஸ்நானஞ்செய்து நியமநிஷ்டை முடித்து சில சவக்கிரியைகளுஞ் செய்கிறார்கள். இவர்களுடைய உதரஸ்தானமே உங்களுடைய சவச்சுடு காடாகின்றது” எனக் கூறியது.

* *

இதைக்கேட்ட மீன் “சிநேகிதா! இவ்விதமான நிஷ்டூரத்தைச் சைவசமயிகளுஞ் செய்கிறார்களென்றுசொல்லுகிறாய்? சைவசமயத்துக்கும்இதற்கும் வெகுதூரமாமே. இப்படிச் செய்பவர்களும் தாங்கள் சைவரென்று வாய்கூசாது சொல்லிக்கொள்ளுகிறார்களா?” என்றது. இதனைக் கேட்ட பொட்டுப்பூச்சி சொல்லுகிறது. “அதற்கென்ன செய்கிறது; சைவசமயத்தவரில் அபிமானமுடையோரில்லை; சமயத்தைப் பரிபாலிப்பாரில்லை; தகுந்த சமயாசாரியர்களில்லை; ஆதலினாற் சமயமுறைகள் குன்றிவிட்டன. ஆனாலும் இனிமேல் சைவசமயம் நல்ல நிலைக்கு வரவேண்டிய குறிகள் இடையிடையே தோற்றுகின்றன. உங்களைச் சுமந்து செல்லும் வலைஞனும் ஒரு சைவசமயத்தவன்தான். அவனுக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் உங்கள் பிரேதங்களை அருவருத்து ஒதுக்கிவருகிறாள். தன் தகப்பனாகிய இந்த வலைஞனையும் கண்டிக்கிறாள். இந்தவிஷயமாக நித்தியமும் சண்டையிடுகிறாள். அவள் சென்ற இரவு பெண்கல்வி என்ற ஒரு புத்தகத்தை வாசித்தாள். அதன் ஆக்கியோன் கத்தோலிக்கமதத்தைச்சார்ந்த ஒரு அறிஞராம். அதில் கிறீஸ்தசமயத்தவர் மாமிசபோசனஞ் செய்தல் ஒருபோதுங் கூடாதெனக் கண்டிக்கப்பட்டிருப்பதாக எழுதியிருப்பதை வாசித்தவுடன் ஆவேசமுற்றவளாகித் தனது பிதாவை மிகவும் கண்டித்து இன்றிரவு பறியையும் கிழித்தெறிந்துவிடுவேனெனச் சபதமிட்டிருக்கிறாள்; அவளுடைய வீடுமோ சமீத்துவிட்டது. நானும அவசியம் வேறுவீடு தேடவேண்டியிருப்பதினால் எங்கள் பேச்சை இவ்வளவில் நிறுத்துவோம்” எனக்கூறியது.

## சமாசாரம்.

உபந்நியாசம்:—நிகழும் ருதிரோத்காரி வருஷம் தைமாதம் 22-ந்திகதி திங்கட்கிழமை இரவு ஆறரை மணியளவில் வண்ணார்பண்ணை வடகிழக்கு, கலட்டி அம்மன்கோயில் மண்டபத்தில் “இந்துசாதன” பத்திராசிரியர் ஸ்ரீ ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் “மானிடதேக அருமையும் அதன்கடமையும்” என்னும் விஷயமாக ௸ உதவிப்பத்திராசிரியர் நீர்வைவாசன் ஸ்ரீ. சிற்சபேசன் அவர்களால் ஒரு சிறந்த உபந்நியாசம் செய்யப்பட்டது. ஸ்ரீ. சாமியில்வாகனம் அவர்களாற் றுதிப்புரை கூறப்பட்டபின் சபாநாயகரவர்கள் ௸ விஷயத்திலுள்ள சாரத்தை ஒருங்கு திரட்டிக் கூறி முடிவுரை செய்தனர். ஸ்ரீ. சி. பொன்னுத்துரை என்பவரால்உபந்நியாசகருக்கும், சபாநாயகருக்கும் ஸ்துதி கூறப்பட்டு இரவு ஒன்பது மணியளவில் தேவார பாராயணத்துடன் கூட்டம் சமாப்தியாயிற்று.

ஆசாரியாபிஷேகம்:-சைவாசாரியரும் அநுராதபுரம் கதிரேசன்கோயில் அர்ச்சகராக இருந்தவரும் பருத்தித்துறைவாசரும் ஆகிய ஸ்ரீமத் மு. தம்பையாக்குருக்கள் அவர்களின் கனிஷ்டபுத்திரன் ஸ்ரீ சச்சிதாநந்தரவர்களுக்கு இந்தத் தைமாசம் 8-ந் திகதி ஆசாரியாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

இராசாங்க வித்தியா சங்கம்.—இராசாங்க வித்தியா சங்கம் சென்ற ஜனவரிமாதம் 26ந் திகதி கொழும்பிலே கூடிற்று அத்தருணம் சில விசேஷ விஷயங்கள் ஆலோசிக்கப்பட்டன. கைத்தொழிற்கும், பாடசாலைப் படிப்புக்கும் யாது சம்பந்த மிருக்க வேண்டுமென்னும் விஷயத்தை யோசித்து அறிக்கைசெய்யும்படி ஓர் சபை நியமிக்கப் படலாயிற்று. கேம்பிறிச் சூனியர்ப் பரீட்சை நிறுத்தப்பட வேண்டுமோ அல்லவோ என்பதன் பேரிற் சம்மதிகள் சேர்க்கப்பட்டபோது, நிறுத்தப்படாது என்னும் மனத் திட்ட முடையார் கட்சியே வெற்றியடைந்தது.

அமரிக்க பிரசாதிபதியின் மரணம்:—அமரிக்கபிரசாதிபதியாகிய டக்றர் உவில்ஸன் இந்தப் பிப்ரவரிமீ 3௳ இறந்து விட்டனர்.

பிரிந்தானிய பொருட் காட்சி:—வருகிற பங்குனிமாதத்திலே லண்டன் நகரத்தில் நடைபெறும் பொருட் காட்சியின் பொருட்டு இலங்கையிற் சேகரிக்கப்பட்ட நூதனபொருட்களை இலங்கையிலுள்ளார் பலர் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டமையினால் அப்பொருட்கள் கொழும்பிலுள்ள டொன்கரோலிஸ் சமுதாயத்தாருடைய தொழிற்சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

### விவாகம்.

அல்வாயை செனனஸ்தானமாக உடையவரும் கோப்பாய் அரசினர் கிஷாபாடசாலை ஆசிரியரில் ஒருவருமாகிய ஸ்ரீ. ஆ. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் ௸ ஊர் ஸ்ரீ. வ. கணபதிப்பிள்ளை அவர்களின் புத்திரி ஸ்ரீ. மதி செல்லம்மாளுக்கும் இந்தமீ 15௳ (28-1-24) விவாகம் சிறப்பாய் நிறைவேறியது. தம்பதிகள் பல்லாண்டு இனிது வாழ்வார்களாக. சடித

## இந்திய சமாசாரம்.

### மகாத்மா காந்தியின் தேகநிலை.

மகாத்மாகாந்தி முற்றிலும் நோய் நீங்கப்பெற்றுப் பூரணசுகமடைந்திருக்கிறார். இரணம் ஆறிவிட்டதென்று கூறலாம். தமது படுக்கையை விட்டெழுந்து அறைக்குள் உலாவுவதற்கு அவருக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. அரைமணிநேரம் உட்கார்ந்திருக்கவும் அவசியமானபோது படுக்கையைவிட்டு எழுந்துபோய் வரவும் அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பழமும், பாலும் தான் உட்கொண்டு வருகிறார். வைத்தியசாலையிலிருந்து அனுப்பப்பட்ட பிறகு அவர் குறைந்தது இரண்டு மாதங்களுக்காவது சுகவாச ஸ்தலம் ஒன்றில் வசிக்கவேண்டுமென்று வைத்தியர்கள் அபிப்பிராயப் படுவதாகத்தெரியவருகிறது.

—நவசக்தி.

## கடிதம்.

### இந்துசாதன பத்திராசிரிய ரவர்களுக்கு:

ஐயா,

தங்கள் இந்துசாதனத்தில் அந்நியநாட்டு மதுக்கடைகள் நீக்கப்பட்ட விஷயத்தைக்கண்டு மிரம்பிய சந்தோஷமடைந்தேன். நம்யாழ்ப்பாணத்தவர்களுக்கு எங்கும், என்றும் கீர்த்தியை உண்டுபண்ணிவிட்டது. இருந்தும் ஒரு தாய்பெற்ற பிள்ளைகளில் ஒன்று தேசாபிமானியாகவும் மற்றொன்று அபிமானக் குறைவாகவுமிருக்கிறதைஅறிய மிரம்பிய வெட்கமுந் துக்கமுமாகவிருக்கின்றது. வடமராட்சிப்பகுதியில் உள்ளவர்கள் தக்ககல்விமான்களுஞ்சமயாபிமானிகளும் ஒழுக்க வழக்கத்தில் மம்பாடுடையவர்களுமாக இருந்தும் இந்த விஷயத்தில் பின்னடைந்தமையை நினைக்க துயருறவேண்டியிருக்கின்றது. அவர்களின் ஒற்றுமைக்குறைவும் ஊக்கமின்மையுமே இதற்குக்காரணம்போலும் இனியாவது அபிமானமுண்டுபட்டு அடுத்தவருஷத்தில் இதை நீக்க முயற்சிசெய்யும்வண்ணம் அவ்விடத்துள்ள தேசாபிமானிகளையும் சனங்களையும் தங்கள் பத்திரிகை வாயிலாகவும் மதுவிலக்குச் சபையார் மூலமாகவும் தூண்டுதல் வேண்டும்சகோதரரிருவரில் ஒருவர் வண்டியிற்பிரயாணஞ்செய்யமற்றவர்கால்நடையாக நடப்பதைக் கண்டு பேசாது விடுவதுசகோதரவாஞ்சைக் குறைவல்லவா? ஆனதினால் வடமராட்சியாருக்கு இனியாவது அபிமானமுண்டுபண்ணுமாறு எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

எத்தால் வாழலாம்; ஒத்தால்வாழலாம்

இங்ஙனம்,
வே. சி. செல்லையா,
13-1-24.

### இரவற் புடைவையில் இது நல்ல கொய்யகம்.

என்னும் ஓர் வாக்கியம்தமிழ்வழக்கில்உண்டு. அதற்கிணங்க கத்தோலிக்கசமய குருமாரும், வேறுமதத்தினரும் நடந்துகொள்ளுகிறார்கள் இலங்காதீபத்தின் ஆன்றோர் சமயம்யாதெனின் சைவசமயமும் புத்தசமயமுமே. தங்கள சமயத்தை நாட்டவந்த இக் கத்தோலிக்க குருமார் இலங்கையில் வசித்த வறிய ஏழைச்சனங்களுக்குப் பொருளுதவியும் வேறு சகாயங்களுஞ்செய்தும் அவர்களுடைய சிநேகிதத்தைப் பெற்றுக்காலகதியில் தங்கள் சமயத்துள் புகுவித்துவிட்டார்கள். ஆனால் அவர்கள் அச்சமயத்தில் நம்பிக்கைவந்து பிரவேசித்தவர்களல்லர். இச்சந்தர்ப்பத்தில் சைவசமயத்தில் இருந்த உயர்ந்த சாதியார் தம்மிலும் தாழ்ந்த சாதியாருக்குச் செய்த கொடுமையைப் பொறுக்க முடியாமலே இவர்கள் மறுசமயம் புகுந்தார்கள் என்பது கவனிக்கத் தக்கது. இக் கொடுமை இக்காலம் மிகக் குறைந்து விட்டாலும்முற்றாய் நீங்கவில்லை. என்ன அநியாயம்! மனித வர்க்கத்திற் பிறந்தவர்கள் எல்லாருக்கும் ஒரேவிதமான உறுப்புக்களையும் தநுகரண புவன போகங்களையும் ஈஸ்வரன் கொடுத்தும் தம்மிலுந் தாழ்ந்தசாதியாரை அநுபவிக்க விடாது தடைசெய்வது தருமமல்லவே! நீதியல்லவே!! இனியாவது நம்மனோர் இதைச் சிந்திப்பார்களா? நிற்க, இக்குருமார்கள் தம்வழிவந்தவர்கட்கு பொருளுதவியும் மற்றும் உலக அநுபவத்திற்கேற்ற சுகங்களையும் செய்தார்கள். அதற்காக அவ்வுதவிபெற்றவர்கள் நன்றிபாராட்ட வேண்டும். இனி இக்குருமாரும் சைவசமயிகளுக்கு மிக்க கடமைப்பாடுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏனெனில் இவ்வந்நியர்களை ஏற்று ஆதரித்து அவர் வழிச்சென்ற இவ்வுபகாரம் வியக்கத்தக்கது. இதசத்துருவாய் வந்த சைவசமயிகளுடையவும், புத்தசமயிகளுடையவும் ஆதரவில் இருக்கும் இக்குருமார் என்ன செய்கிறார்கள் என்றால் அவர்களிடம் பொருள் பெற்று கோவில்களைக் கட்டிக் கொண்டு அரசாட்சி செய்யத் தொடங்கிக் கொண்டார்கள் என்னவியப்பு! என்ன கெட்டித்தனம்!! நீர்கொழும்பில் ஓர் கத்தோலிக்க கோவில் உண்டு. அச்சமயப் பெரியரொருவர் அவ்விடத்தில் புதைக்கப்பட்டவராம். ஆனபடியால் அச்சமயத்தாரொழிய மற்றவர்கள் அவ்வழி செல்லலாகாதாம். மிருகாதி சென்மங்கள் தானும் போகக்கூடாதாம் அவ்வூரில் சைவசமயிகளினால் ஸ்தாபித்த ஆலயமுமொன்றுண்டு. அதிற் சுப்பிரமணியப் பெருமானைப் பிரதிட்டை செய்வதற்காக விழா நடத்திக் கடவுளை வீதிவலம் கொண்டு வருவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தார்கள். மேளம் சேவிப்பதற்கும் வேண்டிய அனுமதிப்பத்திரம் பெற்றார்கள். வீதிவலம் வரும்வழியில் இக்கத்தோலிக்க கோவிலைத் தாண்டித்தான் செல்லவேண்டும். கத்தோலிக்கருமார் இதையறிந்தார்கள். அவர்கள் சட்டைபோட்டவரல்லவா? நீதிபதியிடம் சென்றார்கள் அவருடன்பேசினார்கள் அவரைக்கொண்டு அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தபாதையைமாற்றிவிட்டார்கள் சைவசமயிகளே! சிவநேயச் செல்வர்களே!! அன்பர்களே!!! கவனியுங்கள் உங்கள் வீட்டில் (அதாவது உங்கள் ஊரில்) நீங்கள் நினைத்தபடி ஒருகொண்டாட்டஞ் செய்ய முடியாமல் வந்துவிட்டது. என்னகாலம்! இந்தக்காலம்!! இந்நிலைபரத்தை வருவித்துக் கொண்டவர்கள் சைவசமயிகளாகிய நாங்களே. கொட்டிலுக்குள்ளே தலைவைக்கக்கேட்ட ஒட்டகம் சொந்தக்காரன் இருப்பதற்குத்தானும் இடமில்லாமல் பிடித்துக்கொண்ட கதைபோல் வந்துவிட்டது. அவர்கள்மேற் குற்றமில்லை. அவர்களை இந்நிலைபரத்துக்கு கொண்டுவந்தது நீங்களே இப்பவும் அப்படியே செய்கிறீர்கள். கத்தோலிக்க, மற்றும் அந்நியமதப் பாடசாலைகளில் சைவசமயப்பிள்ளைகள் எத்தனைபேர்படிக்கிறார்கள். ஏன் சைவசமயப்பாடசாலைகள் இல்லையா? அல்லது அப்பாடசாலைகளில் படித்த சைவர் பெரியாராய் வரவில்லையா? இவ்வளவு சைவப்பிள்ளைகளும் மறுசமயப்பாடசாலைகளுக்கு போகாதொழிவரேல் அவர்களால் தங்கள் பாடசாலைகளை நடத்த முடியாது ஒவ்வொரு குறிச்சியிலும் இவர்களால் நடத்தப்படும்பாடசாலைகளில் சைவப்பிள்ளைகளே அதிகமாகவாசிக்கிறார்கள். அங்குதானும் இவர்கள் விசேடமாகக் கற்பது சைவசமயகண்டனமே. ஐயையோ! நம்சமயப் பெரியவர்களே சைவாபிமானப்பிரபுக்களே! உங்கள்புத்திரபுத்திரிகளை அந்நியமதபாடசாலைகளிற்கற்கவிட்டு சைவசமய அறிவு கிஞ்சித்தேனும்இல்லாமல்கெடுக்கின்றீர்களே. இதுவும் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குச் செய்யும் கடமைகளிலொன்றா? கவனியுங்கள்? உற்றுநோக்குங்கள் அதுவுமன்றி சைவசமயபரிபாலனத்துக்கு பணம் உதவ ஒஞ்சிக்கும் நீங்கள் பாதிரிமாரும் குருமாரும் வீட்டுக்கு வந்தால் வேண்டிய உபசரணையுடன் காணிக்கைவிற்றோ கடுக்கனை விற்றோ கடன்பட்டோ பணம் செலுத்திவிடுகிறீர்கள். உங்கள் மதியிருந்தவாறென்னை?

கொழும்பு,

இங்ஙனம்.
சைவசமயி

## விளம்பரம்.

பத்தாம் நம்பர் றிமின்ரன்ரைப்றைற்றரொன்றும் மொனாக் ரைப்றைற்றரொன்றும் றேனியோ ஒன்றும் ஒரு அவுன்ச முதல் இருநூற்றிநாற்பது ருத்தல் வரைக்கும் நிறுக்கக் கூடிய தராசொன்றும் என்னிடம் விற்பனைக்கிருக்கின்றது. தேவையானோர்கள் நேரில்வந்துபார்த்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ந. பொன்னம்பலம்,
சேணியதெரு
யாழ்ப்பாணம்.

## சைவப் பிள்ளைகளும் ஓய்வுநாட் பள்ளிக்கூடமும்.

யாழ்ப்பாணத்திலே வாசஞ் செய்யும் ஜனங்களுட் பலர் சைவசமயிகள். இத்தூய சமயத்திலே பிறந்து வளர்ந்த செல்வப் புத்திர புத்திரிகள் கல்விகற்பதோடு சமய அறிவையும் வளர்க்க எமது நாட்டிலே சைவாபிமானிகள் அநேக சைவப்பாடசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். இவ்விதகலாசாலைகளைத்திறந்த எம் பெரியோருக்கு நாங்கள் என்றென்றைக்கும் கடமைப் பட்டவர்களாயிருப்பதோடு நன்றியும் பாராட்டுகிறோம். யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் போதிய சைவப்பாடசாலைகளில்லாதது அதிககவலையாகவிருக்கிறது. இது லவணமில்லாக்கறியை உண்பதை ஒக்கும். ஆதலால் எமது சைவாபிமானிகளாகிய எமது பெரியோர் இக்குறையையும் நிவிர்த்தி செய்வார்களென்று மனத்திடமாக விருக்கிறோம்.

சைவப்பாடசாலைகளில்லாதவூர்களில் கிறிஸ்தவபள்ளிக்கூடங்கள் ஆமைதலையை நீட்டுவதுபோல் நீட்டிக்கொண்டிருக்கின்றன. இவ்விடங்களிற் சைவவித்தியாசாலைகளை ஸ்தாபித்தால் மிஷனரிமார் தங்கள் கட்டிடத்தை அத்திவாரத்தோடு கிளப்பிக்கொண்டு மேற்குத்திசையை நோக்குவர். அன்றேலாமை குஞ்சு பொரிப்பதுபோற் கிரியும் நரியுமாகக் கிறீஸ்தவர்களைப் பரப்பமுயலுவர்.

சைவவித்தியாசாலைகளில்லாத ஓர் குறையையுடைய நாடுகளில் வசிக்கும் பிள்ளைகள் கல்விகற்கக் கிறீஸ்த பாடசாலைகளுக்குப் போக நேரிடுகிறார்கள். அங்கே கிறீஸ்த உபாத்திமார் தங்கள் சமயத்தைப் படிப்பிப்பதோடு எம் பிள்ளைகளை ஓய்வுநாட் பள்ளிக்கூடத்துக்கும் போகும்படி கட்டளையிடுகிறார்கள். இத்தகைய உபாத்திமாரை எவ்விதம் எனது நாவாற் கூறுவேன். இந்த ஆசிரியர் பிரித்தானிய அரசாட்சியாரிலும் அதிக வலிமையும் உரித்தும் உடையவர்களா?...... ............ ......இதையறிந்த சில கிறீஸ்தவர்கள் சிலமாறுபாடு செய்யும் படியாகக் கெஞ்சிக் கேட்டனர். இவர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்து அரசாட்சியாரும் ஒரு சமயத்துப் பிள்ளைக்கு இன்னொருசமயத்தவர் தமது மதத்தை ஓதுங்காலையில், அப்பிள்ளை, அல்லது அவருடைய பெற்றார் அல்லது பாதுகாவலர் அல்லது அச்சமய அபிமானிகள் விருப்பமினங்கொண்டால் அம்மாணவருக்கு அச்சமயத்தை ஊட்டாதொழிய வேண்டுமென்றும் மறுபடி கூறியிருக்கின்றனர், இவ்வித உதவியை எமது பிரித்தானிய அரசாட்சி, எல்லாச் சமயத்தையும் நன்குணர்ந்தபின்னர்த்தானுக்கும் செய்தபோதும், நாமேன்பிள்ளைகளைப் புறசமயத்தவருடைய பாடங்களைப் படிக்க விடுவது?

சைவச்சகோதரர்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கிறீஸ்தவர்களுடைய பாடசாலைக்கு விடுவதால் எவ்வளவு தீமைகள் வருகின்றனவென்றுணருங்கள். முதலாவதாக உங்கள் உண்மைச் சமயத்தைப் படியாமலுங்கள் பிள்ளைகள் விடுகிறார்கள், எங்களுட்சிலர் பகவானை நோக்கித் தவஞ்செய்தல்லவா புத்திரபாக்கியத்தை அடைகிறார்கள், அருந்தவத்தாற் பிறந்த பிள்ளைகள் தானும் அப்பகவானை நினைக்க அல்லது அப்பகவான் பேரில் எமது போற்றற்குரிய சைவசமய குரவர்கள் பாடியருளிய தேனினுமினிய தேவார திருவாசகங்களைப் படிக்கத் தெரியாதவர்களாய் மயங்கித்தியங்கித்திரிகிறார்கள். இரண்டாவதாகக் கிறீஸ்தவ உபாத்திமார்தாங்கள் தங்கள் பாதிரியாரிடம் மகிமையடைவதற்கு எமது பிள்ளைகளை ஓய்வுநாட் பள்ளிக்கூடத்துக்கு வரும்படி பலாத்காரம் பண்ணுகிறார்கள். மூன்றாவதாக, "இளமையிற்கல்வி சிலையிலெழுத்து" என்று ஒளவைப்பிராட்டியார் அருளியதுபோலெமது சைவப்பிள்ளைகளும் இளம்பராயத்தில் ஒரு சமய உணர்ச்சியுமில்லாத களங்கமற்றமனதில் கிறிஸ்தவப்போதகமாரும் உபாத்திமாரும் பாடசாலைகளிலும் ஓய்வுநாட் கூட்டங்களிலும் தங்கள் மத போதனையைப் போதிக்கக் கேட்ட இவர்கள் கிறீஸ்தசமயமே சமயமென்று திடங்கொள்ளுகிறார்கள். கெட்டசெயல்களை உடைய ஒரு பிள்ளைக்கு நற்குண நற் செய்கைகளைப் பழக்குவது மிக அரிது. அப்பிள்ளை பழகிக்கொண்ட தீயசெயல்களையும் குணங்களையும் முதல்மாற்றிப் பின்பு தான் நற்பழக்கவழக்கங்களைப் பயிலுவிக்கலாம். அதுபோலவே கிறீஸ்தபாடங்களைக் கற்றுக் கொண்ட பிள்ளைக்குச் சைவமதத்தை ஓதுவது கஷ்டமாகவிருக்கும். இவ்வித தீய எண்ணங்களை உடைய ஆசிரியர் ஓய்வுநாளொன்று செல்லியும் எம்பிள்ளைகளை அன்றைக்காவது ஓய்ந்திருக்கவிடுகிறார்களில்லை. இவர்கள் ஓய்வுநாட்கூட்டத்துக்குப் போகாத சைவப் பிள்ளைகளைத் தண்டிக்கிறார்களாமே இது என்னே கொடிது! எம்பிள்ளைகள் இவர்களுடைய கூட்டத்துக்குப்போகாவிட்டாலிவர்களுக்கு மனத்திருப்தியில்லையா? எங்கள் பிள்ளைகள் மீது கிறிஸ்தவ ஆசிரியர்கள் இரக்கங்கொண்டனரோ! அப்படியானால் இவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் எம்பிள்ளைகளுக்குப் பொது அறிவை ஊட்டுகின்ற மற்றப்பாடங்களைப் படிப்பித்தாலென்ன? தெய்வம் விடைகொடுத்தும் பூசாரி விடைகொடுக்க வில்லையென்ற பழமொழிபோல் அரசாட்சியார் எங்களுக்குச் சில உரித்துகளைக் கொடுத்தும் கிறிஸ்தவ உபாத்திமார் அவைகளை அபகரிக்கப் பார்க்கிறார்களே இது என்ன அநியாயம்! என்ன கொடுமை!! இவர்களுக்குக் கடவுளாக்கினை தானில்லையா?

கல்விக்கடலையுண்ட சமயாபிமானிகளே! நீங்களாவது அரசாட்சியாரின் ஒழுங்கைத் தெரியாமல் உபாத்திமாரென்று போலி நாமம் படைத்த கிறீஸ்தவ ஆசிரியர்களுடைய செவியில் உங்களுடைய உரித்துக்களை எடுத்து உரையுங்கள். அவர்களுக்கு நீங்கள் நற்புத்தி கூறுங்கள் அவர்களுடைய கண்களைத் திறப்பித்துப் பிரித்தானிய அரசின் சட்டலைச் சட்டங்களை ஒவ்வொன்றாகக் காட்டிக் கொடுத்துப் வாசிப்பித்தும் அர்த்தத்தைச் சொல்லியுங் கொடுங்கள். உண்மையான கல்வியறிவில்லாத மூடரைப் பாதிரிமார் விலைக்குவாங்கி உபாத்திமாரென்று கிறீஸ்த பள்ளிக்கூடங்களில் வைப்பதால் விளையுந் தீமைகள் இவையே.

அபிமானிகளே! உங்கள் பிள்ளைகள் கிறீஸ்த பாடசாலைகளுக்குப் போகாதொழிந்தால் இவ்வித தீங்குகள் சம்பவிக்கமாட்டா. தற்போது வயிறு வளர்ப்புக்காக விருக்கும் கிறீஸ்தவர்கள் உண்மையாகச் சமய ஆராய்ச்சி செய்தும் மெய்ச்சமய மெதுவென்றுணர்ந்தும் ஈடேறிவிடுவார்கள். உங்கள் பிள்ளைகளை வியாபாரச் சரக்குகளென்றும், கிறீஸ்த உபாத்திமாரைக் கணக்கப்பிள்ளைகளென்றும், பள்ளிக்கூடங்களைக் கம்பனிகளென்றும் நினைக்கும் பாதிரிமார் சமுத்திரங்கள் தாண்டிவந்து உங்களுக்கு நன்மை செய்வார்களென்றும நினைக்கிறீர்களா? கொம்பனிமுகாமைக்காரர் போலவே இப்பாதிரிகளும் மானேஜர் வேலைபார்த்துக்கொண்டு பணமூட்டைகளை வருஷந்தோறும் கட்டித் தங்களூருக்கனுப்புகிறார்கள். இதை நீங்களறியாதிருக்கிறீர்கள்?

செல்வச்சிரஞ்சீவிகளாகிய சைவாபிமானிகளே! அந்நிய பாதிரிமார் தான் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும், உங்கள் சந்ததிக்கும், உங்கள் தமிழ்நாட்டுக்கும் அபகீர்த்தியை உண்டாக்குகிறார்களென்று நினைத்தால் இத்தீமையை விளைவிக்கிறதில் முக்கியகாரணகாரராகவிருப்பது உங்களுடன் முளைத்த கிறிஸ்தவர்களே. ஆதலால் முதன்முதல் இத்தீய முளையை வேரோடு களைய எத்தனியுங்கள். பின்னர் தொழிலில்லாது தவிக்கும் பாதிரிமார் தாங்களாகவே மேற்குச்சமுத்திரத்தைத் தாண்டுவர். இவ்விதஞ் செய்யத் தவறுதிருப்பீர்களென நினைத்து ஈஸ்வரனையும் ஈஸ்வரியையும் முழுமனத்தோடும் துதிக்கிறேன்.

இங்ஙனம்,
S. P. அருணாசலம்,
அச்சுவேலி.

## காரைநகர் இந்துவாலிபசங்கம்.

சென்ற தைமீ ௨௬ (26-1 24.) சனிக்கிழமை பிற்பகல் மூன்றரை மணியளவில் சுப்பிரமணிய வித்தியாசாலையில் தேவாரம் பிரம்மஸ்ரீ க. செல்லையாக்குருக்கள் அவர்களால் "திருநாவுக்கரசு நாயனாரின் திவ்விய சரித்திரம்" பக்கவாத்திய சகிதமாகபிரசங்கஞ் செய்யப்பட்டது.

பிரசங்கசாரம்:—

திருநாவுக்கரசு நாயனார் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே திருவவதாரஞ் செய்தனர். அவர் இளமைப்பராயத்தில் மருணீக்கியாரென்னும் பெயருடன் அழைக்கப்பட்டு வந்தனர். அவரது இளமைப்பராயத்தில் பெற்றார் இறந்து விட்டனர். ஆகையால் அவர் தமக்கையாராகிய திலகவதியாரின் ஆதரவின் கீழ்வளர்ந்து வந்தனர். அவர் கல்வி கற்றபின் சமணசமயத்தவர்களுடைய துற்போதனையினால் சற்சமயமாகிய சைவசமயத்தை விடுத்துச் சமணசமயப் பிரவேசஞ் செய்தனர். இச்சமாசாரத்தைத் திலகவதியாரறிந்து துக்கசாகரத்திலமிழ்ந்தினர். அவர் தினந்தோறும் கோயிலுக்குப் போய்த் திருத்தொண்டு செய்வது வழக்கம். அவர் திருத்தொண்டு செய்யுங் காலமெல்லாந் தமது தம்பியாரை மறுபடியுஞ் சைவசமயத்தில் கொண்டுவந்து தரும்படி பிரார்த்தித்தார். "வேண்டுவோர் வேண்டுவதை யீயும்பரம்பொருள் மருணீக்கியாருக்குச் சூலைநோயையுண்டாக்கிச் சைவசமயப் பிரவேசஞ் செய்விப்பதாகத் திருவுளம் பற்றினர். அப்படியே மருணீக்கியார் சூலைநோயுண்டாகப்பெற்றுச் சமணசமயத்தவர்களால் சுகப்படுத்த முடியாமற் திலகவதியாருடைய வீட்டிற்கு வந்தனர். அவர் தம்பியாருடைய வரவினால் அதிக சந்தோஷமடைந்து திருவருளை வியந்து விபூதியிலே பஞ்சாட்சரத்தை ஜெபித்துத் தரிக்கும்படி கொடுத்தனர். அவர் தரித்தவுடன் சூலைநோய் படிப்படியாகக் குறைந்து வந்தது. பின்னர் மருணீக்கியார் ஆலயத்துக்குச் சென்று கண்களிலிருந்து ஆனந்தவருவி சொரியத் திருப்பதிகங்களைப் பாடித் தோத்திரஞ் செய்தனர். பின்னர் அவர் சூலைநோயிலிருந்து பூரணசுகமடைந்தனர். அவர பாடிய் பாட்டுத்திறமையினால் "நாவுக்கரசு" என்னும் பெயரைப்பக்திவலையிற் படுவராகிய சிவபெருமான கொடுத்தருளினர். இதனை யறிந்த சமணசமயத்தவர்கள் அவரைப் பிடித்துக்கொண்டுபோய் ஏழுநாள் சுண்ணம் பறையில் மறியலிட்டார்கள் அவர் எவ்விதமாக வேனும் வருத்த மடையாதிருப்பதைக் கண்டு நஞ்சு கலந்த சோற்றைக் கொடுத்தனர். நஞ்சு அவருக்கு அமிர்தம்போல் நன்மை செய்ததேயன்றி வெவ்விதமாகவேனும் தீமை செய்ய வில்லை பின்னர் அவரைக் கொல்லும்படி யானையை யேவிவிட்டார்கள். அது நாவுக்கரசரை வலம்வந்து வணங்கித் தன்னையேவி விட்டவர்களாகிய சமணசமயத்தவர்களை அடித்துக் கொன்றது. கடைசியாய்க் கல்லுடனே கட்டி நடுச்சமுத்திரத்திற் போட்டார்கள். அக் கல்லே தோணியாக மிதந்து அவரைக்கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்தது. இதனையறிந்த சமணசமய அரசன் சமணர்களுடைய பள்ளியையிடிப்பித்துச் சிவாலயமாக்குவித்துத் தானுஞ் சைவசமய பிரவேசஞ் செய்தனன். இப்படியே நாயனார் பல ஸ்தலங்களையுந் தரிசித்துப் பதிகங்கள்பாடி வருகையில் அப்பூதி நாயனாரின் பக்தி விசேஷத்தைப்பற்றி யறிந்து அவருடைய வீட்டுக்குச் சென்றனர். அங்கே அப்பூதிநாயனாரின் மகன் திருநாவுக்கரசு நாயனாரை யமுதுசெய்விப்பதற்கு இலை வெட்டிய பொழுது பாம்பு கடித்து இறந்து விட்டான். அவனைச் சிவாலயத்துக்கு முன்பாக வெதிப்பித்துச் சுகப்படுத்தினர். பின்னர் பல ஸ்தலங்களையுந் தரிசித்து வருகையில் வடதளியென்னும் ஸ்தலத்தில் சமணர்கள் சிவலிங்கத்துக்கு மேல் தங்களுடைய பள்ளியைக் கட்டியிருந்தார்கள், நாயனார் அச்சிவஸ்தலத்தைத் தரிசிப்பதற்கும் சிவலிங்கம் வெளிப்படுதல் வேண்டுமென்று பிரார்த்தித்தார். அவருடைய பிரார்த்தனையின் பிரகாரம் அவ்வூரரசன் சமணர்களு

டைய பள்ளியை யிடித்துச் சிவாலயங்கட்டுவித்தான். நாயனார் இப்படியே பல ஸ்தலங்களையுந் தரிசித்து வருகையில் பன்னிரண்டு வருஷகாலமாக மழையில்லாமற் பஞ்சமுண்டானது. அப்பொழுது சிவபெருமான் தமது அடியார்கள் வருந்துவார்களென்று திருவுளமிரங்கித் தினந்தோறும் படிக்காசு கொடுத்து வந்தனர். பின்பு திருநாவுக்கரசுநாயனார் அன்பு முதிர்ச்சியினால் சிவபெருமானுடைய திருக்கோலத்தைக் காண்பதற்குக் கைலாசத்துக்குப் போகவேணுமென்று புறப்பட்டனர். அவர் அதிக தூரம்போனதினால் தேகம் முழுவதுஞ் சிதைந்துபோய் அசைந்து கொள்ள இடமாதவராய்ப்படுத்திருந்தனர். அப்பொழுது சிவபெருமான் ஒரு முனிவர்வேடம் பூண்டு அவருக்குத் தோன்றி, சமீபத்தில் ஒரு குளத்தை யுண்டாக்கி, உடம்பெல்லாஞ் சிதைந்துபோக இக்கொடிய காட்டில் ஏன் வந்தீரென்று வினவினர். அதற்கு நாயனார் திருக்கைலாசத்துக்குச் சென்று அவருடைய திருக்கோலத்தைக்காணும் பொருட்டு வந்ததாகச் சொன்னார். முனிவர் வேடம்பூண்டுவந்த சிவபெருமான் அவருடைய பக்தி வலிமையைச் சோதிக்கும் பொருட்டு பரம்பொருளைக் காணமுடியாதென்று திரும்பிப் போகும்படி சொன்னார். பக்த சிரேஷ்டராகிய அப்பசுவாமிகள் சிவபெருமானுடைய திருக்கோலத்தைக்கண்டல்லாமல் திரும்பிப்போவதில்லையென்று மறுத்தனர். அவருடைய அன்புமுதிர்ச்சியைக்கண்ட சிவபெருமான் அவரையெழுந்து அக்குளத்தில்ஸ்நானஞ்செய்தால் திருவையாற்றையடையலாமென்றும் அங்கே சிவபெருமானுடைய திருக்கோலத்தைக் காணலாமென்றுமருளிச்செய்தனர். அவர் எழுந்தவுடன் தேகம் முன்போலானது. உடனே அக்குளத்தில் ஸ்நானஞ் செய்து திருவையாற்றை யடைந்தனர். அங்கே சிவபெருமானுடைய திருக்கோலத்தைக் கண்டு பேரானந்த மடைந்து கண்ணிலிருந்து ஆனந்த அருவி சொரியப் பதிகங்கள் பாடினர். இப்படியே திருநாவுக்கரசு நாயனார் பல ஸ்தலங்களையுந் தரிசித்துப் பதிகங்கள்பாடிச் சித்திரைமாசச் சதய நட்சத்திரத்திற் சிவபெருமானுடைய பாதார விந்தத்தை யடைந்தனர்.

ஆகையால் சைவசமய அன்பர்கள் யாவருமுண்மையான அன்புடன் "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்ற ஔவைப் பிராட்டியாருடைய வாக்குக்கிசைய ஆலயவழிபாடுசெய்து வந்தால் சிவபெருமானுடைய பாதாரவிந்தத்தை யடைவார்களென்பது நிச்சயம்.

காரியதரிசி.

## மேனாட்டுப் பழக்கங்களின் கேடு.

(முற்றொடர்.)

ஐம்பது அறுபது வருடங்களுக்குமுன் செல்வந்தர்களின் குடும்பங்களில் கூட ஸ்திரீகள் சமையல் வேலையைத் தாங்களே செய்து கொண்டிருந்தார்கள். அல்லது அவர்கள் ஜாக்கிரதையான மேற்பார்வை யாவது பார்த்துவந்தார்கள். அடுக்களை வெகு சுத்தமாயும் பார்க்க மனக்களிப்பை உண்டு பண்ணுவதாயும் இருந்தது. குடித்தனமும் செட்டாகவும் சிக்கனமாகவும் நடந்தது. சமையல் செய்த ஆகாரமும் சுத்தமாகவும் ஆரோக்கிய முள்ளதாகவும் இருந்தது. ஆனால் இந்தக்காலத்தில் ஏககுடும்பம் என்னும் வழக்கம் சிதைவுபட்டு விட்டதனாலும் இன்னும் அநேக காரணங்களாலும் அதிக செல்வந்தர்களாயில்லாத குடும்பங்களிற் கூடசமையலுக்குப் பரிசாரகன் வேண்டியிருக்கிறது நமது பெண்டிரிற் பலர் சமையற்றொழிலையே பெரும்பாலும் மறந்துவிட்டனர். அதனால் உண்டியும் ஆரோக்கியமானதா யில்லாமல் பல வியாதிகளை உண்டுபண்ணுகிறது. முதலில் உண்டிப் பதார்த்தங்கள் கடையில் வாங்கும்போதே கலப்பு, அதிலும் சமையற்காரர்கள் கையாடுவதில் இன்னும் கலப்பும் அசுத்தமும் அதிகமாகி தேகத்துக்குக் கேடு விளைக்கின்றன. இன்னும் பல குடும்பங்களில் அடுப்பெரிக்க விறகு உபயோகிப்பதற்கு பதில் நிலக்கரியை எரிக்கிறார்கள். இது தேகத்துக்கு மிகவும் கெடுதி. ஏனென்றால் விறகெரித்துச் சமைக்கப்பட்ட ஆஹாரம் விறகு கனிந்து எரிய சாவகாசமாவதனால் சாவகாசமாக வேக்காடாய் நன்றாய்ப் பக்குவப்படுகின்றது. ஆனால் நிலக்கரி எரிப்பதால் சீக்கிரமாக உஷ்ணமேறிவிடுவதால் ஆகாரம் அவ்வளவு நன்றாகப் பக்குவமாக இடமிருப்பதில்லை ஆதலால் அஜீரணம் முதலிய பல்வேறு வியாதிகள் உண்டாகின்றன. இதைத் தவிர நிலக்கரியின் புகை தேகசௌக்கியத்துக்குக்கெடுதியையுண்டாக்குகிறது. கண்ணுக்குங் கெடுதி. இன்னும் நாம் இரவில் உபயோகப்படுத்தும் வெளிச்சங்களிலும் "முன்னேற்றத்து"க்குப் பொருத்தமாக மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. முற்காலத்தில் விளக்கெண்ணெய் விளக்குகள் உபயோகப்பட்டுவந்தன. இப்பொழுதோ எங்கே பார்த்தாலும் மண்ணெண்ணெய் விளக்குகளும் மின்சார விளக்குகளுமே வழங்கிவருகின்றன. இதனால் தேகத்துக்கு நேரிடும் பீடைகள் அனந்தம். பால் மணம் மாறாச் சிறார்களெல்லாம் கண்கெட்டுக் கண்ணாடிபோட்டிருக்கும் இக்காலத்திய கோரக் காட்சிக்கு இந்தப் பாழும் மண்ணெண்ணெயே காரணம். விளக்கெண்ணெய் விட்டெரிக்கும் குத்துவிளக்கே பார்க்க மிகவும் அழகு. அதுவே திருவிளக்கு. வீட்டுக்கு லக்ஷ்மீகரம் கொடுப்பது. கண்ணுக்கும் நல்லது. மாலையில் திருவிளக்கேற்றித் தெய்வந் தொழும் வழக்கமும் இப்பொழுது நகரங்களில் மறைந்துவருகிறது.

இன்னும் இவையெல்லாவற்றையும்விட மிகக் கேடு விளைக்கும் ஒரு துர்வழக்கம் நம்மிற் பலருக்குப் பழக்கமாயிருக்கிறது. ஸிகரெட், பீடி என்னும் புகைச் சுருட்டு குடிப்பது இப்பொழுது ஸர்வ சாதாரணமான காரியமாய் விட்டது. பத்து வயதுச் சிறுவர் முதற் கொண்டு பீடி சிகரெட் குடிக்க ஆரம்பித்து விட்டனர். அபின், கோகெயின் இந்த லாகிரி வஸ்துக்கள் உட்கொள்ளும் வழக்கமும் அதிகரித்து வருகிறது. நகரங்களில் குடி பெருகி வருவதைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

விளையாட்டு என்னும் துறையிற்கூட நம் பழையபகாள் விளையாட்டுகளெல்லாம் பேர்கூடத் தெரியாமல் மறைந்துபோயின. அவை நம் தேசத்துக்கு ஏற்றது என நம் முன்னோர்கள் வருஷக் கணக்கான அனுபவத்தில் தெரிந்துகொண்டு கையாடி வந்தவை. அவைகளெல்லாம் போய் இப்பொழுது உதைபந்து (புட்பால்) மட்டைப்பந்து (கிரிகெட்) முதலிய நம் நாட்டின் சீதோஷ்ண ஸ்திதிக்குக் கொஞ்சமேனும் பொருத்தமில்லாத மேனாட்டு விளையாட்டுகள் உலவி வருகின்றன. மேனாடுகளில் பகல்வேளையில் வெயில் மிகவும் ரம்மியமாக இருக்கும். ஆகவே அங்கே பகலில் கிரிகெட் ஆடுவார்கள். இரு தேசங்களுக்கும் உள்ள சீதோஷ்ண வித்தியாசங்களைச் சற்றேனுங் கவனியாமல் அதே வழக்கத்தைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி இந்தத் தேசத்திலும் நல்ல பொரியும் வெயிலில் இந்தக் கோரமான "மட்டைப்பந்து" விளையாட்டை விளையாடுகிறார்கள்.

இன்னும் "முன்னேற்றத்து"க்கும் நாகரிகத்திற்கும் ஓர் அடையாளமாகக் கருதப்படும் தற்கால வாஹனங்களாகிய பைஸிக்கிள் டிராம் இவற்றில் ஏறுவது அளவுக்கு மிஞ்சி அதிகரித்துவிட்டது. கேவலம் சொற்ப தூரம் போகவேண்டியிருந்தாற்கூட இந்த வாஹனங்களில் நம் சிறுவர்கள் ஏறிக்கொள்கின்றனர். எனவே மிகவும் நல்ல வழக்கமாகிய நடக்கும் வழக்கமும், அதற்கு வேண்டிய தேஹசக்தியும் அறவே ஒழிந்தன. இக்காலத்திய டாக்டர்கள் கூட மிதத்துக்கு மிஞ்சி பைஸிக்கிள் ஸவாரி செய்வதனால் மூலம் முதலிய பல வியாதிகள் விருத்தியாகின்றன என்று சொல்லுகிறார்கள்.

ஸ்நானம் ஸந்தியாவந்தனம் முதலிய நித்திய கர்மங்களில் நம் தேஹ ஆரோக்கியத்தைப் பெருக்கும் மர்மங்கள் செறிந்து கிடக்கின்றன. அவற்றை விரிக்கிற் பெருகும். அது ஒரு தனி வியாசத்துக்கேற்ற விஷயம். ஆனால் இக்காலத்திலே நம்மவர் வைகறைத் துயிலெழுதல், காலை மாலைக் கடனைகள் முதலிய நல்ல வழக்கங்களை யெல்லாம் ஒரே அடியாக விட்டுவிட்டார்கள். இதைத் தவிர புராதன இந்தியாவின் கல்விஏற்பாட்டிலுஞ் சரி, மற்ற லௌகிக ஏற்பாட்டிலுஞ் சரி, ஸாவகாசமான மத்தியானச் சாப்பாட்டுக்கு இடமிருந்தது. தேஹ ஆரோக்கியத்துக்கும் இடமிருந்தது. அதாவது காலை ஏழுமணி முதல் பத்துமணிவரை அத்யயன காலம். பிறகு மாலை மூன்றுமணியிலிருந்து ஐந்துமணிவரையில் இதற்கிடையே ஸாவகாசமாய்ப் பகற் போசனஞ் செய்துவிட்டுச் சிறிது இளைப்பாறவும் இடமிருந்தது. இக்காலத்திலோ சாந்திமயமானதும் தேஹத்துக்கு ஊக்கம் அதிகமாக இருக்கக்கூடியதுமான காலை, மாலை இவ்விருவேளைகளையுந்தவிர தேஹ பலமெல்லாம் தற்றுப்போய்க் களைத்திருக்கக்கூடிய வெயில் கொளுத்தும் பகல் வேளையே லௌகிக வேலைகள், படிப்பு முதலியவற்றுக் கேற்பட்ட ஸமயமாயிருக்கிறது. சாப்பாட்டைப் பசியில்லாத பத்துமணி வேளைக்கு அவஸரமாக "விழுங்கி" விட்டு வேலை ஸ்தலத்துக்கு ஓடவேண்டியிருக்கிறது. மேற்கூறியுள்ள பல்வேறு கெட்ட வழக்கங்களில் ஏதாவது ஒன்றே தேஹ ஆரோக்கியத்தைக் கெடுக்கப் போதுமானது. எல்லாம் ஒருங்கே சேர்ந்திருக்கும் இக்காலத்தில் நம் நாட்டினருக்கு ஆண்மையும் வலிமையுங்குன்றி அவர்கள் நடைப் பிணங்கள்போல உலவி வருவது ஓர் விந்தையா?

மேனாட்டு வழக்கங்களை இந்நாட்டில் உலவவிட்டு நம் வலிமையைக் குறைத்தது போதாமல், மேனாட்டார்களும், "இங்கிலீஷ்" படித்த இந்தியர்களும் நமது தேஹ அசௌக்கியத்துக்கு முக்கிய காரணம் சுகாதார முறைகள் நமக்குக் கொஞ்சமேனும் தெரியாததே என்று சொல்லுகின்றனர். இது "புண்ணிடைக் கோலிட்டற்று." சுகாதாரத்துக்கு அத்தியாவசியமான தேஹ சுத்தி ஒழுங்குகள் முக்கியமாக அவர்களில் மேல்ஜாதியார்கள் வெகுகாலமாக அவர்களுடைய சுத்திக்குப் பேர்போனவர்கள். ஆங்கில அரசு இந்தியாவில் ஸ்தாபனமான ஆரம்பத்தில் இங்கிலீஷ்காரர்கள்கூட அதைப் பார்த்து மூக்கில் கை வைத்திருக்கிறார்கள். உண்மை யாதெனில் நம்மில் ரோகங்களும், தேக அசௌக்கியமும் எங்கும் மலிந்திருப்பதன் முக்கிய காரணம் தற்கால "முன்னேற்றமும்" அதன் ஆபாசங்களுமே. சுகாதார மின்மையினாலன்று. "முன்னேற்ற"க்காரர்களின் தவறான சுகாதாரத்தினாலேயே; தவறான ஆசாரங்களினாலேயே. பிளேக் முதலிய கொடிய வியாதிகள் இப்பொழுது நாடெங்கும் பரவி வருவதற்கும் நமது நவீன நாகரீக துராசாரங்களே ஒருவாறு காரணமாகும்.

ஆனால் இந்த ஆபாசச் சேற்றினிடையேயிருந்து புதுத் தமிழன் பிறந்துகொண்டிருக்கிறான். நாம் யுக ஸந்தியில் இருக்கிறோம். இந்த ஆபாசங்களை யெல்லாம் போக்கிக் கிருதயுகத்தைக் கொண்டுவரும் புதுத் தமிழன் பிறந்துவிட்டான். அவன் வரவு நல்வரவாகுக! வந்தேமாதரம்! —லோகோபகாரி.


### விளம்பரம்.

புதிய வெக்தீஸ்மேஸ்தர் யாழ்ப்பாணம் சோனகதெரு M மீரான்முகியித்தின் லைசென்ஸ் பெற்று வெக்தீஸ்மேஸ்தராக ஏற்பட்டிருக்கிறார்.

(Mis. 434.)

### திறமான மங்களூர் ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

### விளம்பரம்.

ஏழாலை, வீரகத்திப்பிள்ளை மகன் சின்னையா அல்லது பாக்கியநாதராகிய யான் எனது பெயர் இன்று தொடக்கம் சிவபாக்கியநாதபிள்ளையென மாற்றப் பட்டிருக்கிறதென்பதையும் இன்மேல் சிவபாக்கியநாதபிள்ளையென்றே கையொப்பமிட்டு எல்லாவற்றிலும் வழங்குமென்பதையும் தெரிவிக்கின்றேன்.

4-2-24 இங்ஙனம்,
வீ. சிவபாக்கியநாதபிள்ளை,
(Mis. 433). மூளாய்.

### அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
(H. 21) வண்ணார்பண்ணை.

## பித்தளை டம்ளர்கள்.

### இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!!

உயர்ந்தபித்தளைத் தகட்டினாற் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்கு பளபளப்பாக விருக்கும் நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3 கொண்ட. செட் 1க்கு ரூபா 1 அணா 12.
சாதா டம்ளர் „ கொண்ட செட் „ ரூபா 1 அணா 9.

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29)

### அறிவித்தல்.

வேலணை கிழக்கு இலந்தைக்காட்டுப் பிள்ளையார்கோவிலிற் பூசைசெய்யும் பிரம ஸ்ரீ சம்புகேஸ்வர ஐயருக்கும், ஊரவர்களால் மேற்குறித்த கோயில் மனேசராகத் தெரிவு செய்யப்பட்ட மேற்படியூர் வீரகத்தியார் கார்த்திகேசராகிய எனக்குமிடையில் பெரியகோட்டில் 16190ம் இலக்கத்தில் வழக்கு நடந்து கோவில் ஊர்ப் பொதுவாகவும் ஐயர் பூசைக்காரனாகவும் என்னையும் மேற்படி ஐயரையும் மனேசராகவுந் தீர்ந்தது.

இனி மேற்படிகோவில் திருப்பணிவேலை நடைபெறவேண்டி யிருப்பதால் குறித்த கோவிற் திருப்பணிக்குப் பொருளுதவும் தருமசீலர்களுக்குத்தெரிவிப்பது மேற்படி கோவிலின் நிர்வாகசபையாரால் பணஞ் சேகரிப்பவரைத் தெரிவுசெய்து இப்பத்திரிகை மூலமாகப் பெயர்வழிகாரரையும் அதன் விபரங்களையும் தெரிவிக்கப்படுமென்பதை யறியத்தருகிறேன்.

வேலணை கிழக்கு,
25—1—24. வீ. கார்த்திகேசு.
(Mis. 431.)

### "லோகோபகாரி".

30-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமாந். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராகவும் அதிபராகவும் இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷசந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா 6. மாதிரிப்பிரதி இனாம்.

காரியஸ்தர், "லோகோபகாரி"
சோமசேஸ்வரன் பேட்டை, சென்னை.

### "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

### உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது புஷ்டிக்கு கைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்று மில்லை. பரிக்ஷிக்க ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ 4 0 0
20 பில்ஸ் ரூ 2. வி. பி. சார்ஜ் வேறு

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ. 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41 வைத்.) வைத்தியசாலை, பழனி. S. I


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.